முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

3

## 1.3. இயேசுவின் திருமுழுக்கும் அவரது பணி வாழ்வும்



**இயேசுவின் திருமுழுக்கு**

மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

லூக். 3:21-22

இயேசு கடவுளின் மகனாய் இருந்தும் திருமுழுக்கு யோவானால் திருமுழுக்குப் பெறுகின்றார். மூவொரு இறைவன் தம்மை வெளிப்படுத்துகின்றார். அவர் பாவமற்ற நிலையிலும் தன்னைப் பாவிகளோடு ஒருவராக்கினார். இதன் மூலம் இறைத்திட்டத்தை வெளிப்படையாக அறிவிக்கின்றார்.

அவர் கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார்; அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார்; விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார்; மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். அவரைப்பற்றிய பேச்சு சிரியா நாடு முழுவதும் பரவியது. பல்வேறு பிணிகளாலும் வாதைகளாலும் வருந்திய நோயாளர், பேய் பிடித்தோர், மதிமயங்கியோர், முடக்குவாதமுற்றோர் ஆகிய அனைவரும் அவரிடம் அழைத்து வரப்பட்டனர். அவர் அவர்களைக் குணமாக்கினார்.

மத். 4:23-24

இயேசு தனது திருமுழுக்கின் பின் இறைத்திட்டத்தை நிறைவேற்ற பகிரங்கப் பணியை ஆரம்பிக்கிறார். மக்களின் மீட்புக்காக தம்மை அர்ப்பணிக்கிறார். கலிலேயா தொடங்கி பல இடங்களிலும் இறையாட்சியை அறிவித்து மக்களுக்குப் பணியாற்றினார்.

## இயேசுவின் பணிகள்



இவ்வாறு இயேசுக் கிறிஸ்துவில் இறைத்திட்டம் முழுமையடைகிறது. தாம் இவ்வுலகைவிட்டு நீங்கும் முன் இப்பணியைத் தொடர சிலரைத் தெரிந்தெடுக்கிறார். தான் உயிர்த்த பின் மகிமையுடன் சீடருக்கும் காட்சியளித்து தமது பணியைத் தொடர சீடருக்குப் பணித்தார்.

பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்த படியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டு பணிந்தார்கள். சிலரோ ஐயமுற்றார்கள். இயேசு அவர்களை அணுகி, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும் படி கற்பியுங்கள். இதோ! உலகு முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என்று கூறினார்.

மத். 28:16-20

உயிர்த்த இயேசு விண்ணேற்பு அடையுமுன் தம் சீடருக்கு கொடுத்த அறிவுரைகளைப் பூர்த்தி செய்க.

1. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் ............................................
2. எனவே நீங்கள் போய் ............................ சீடராக்குங்கள்.
3. தந்தை மகன் ......................................... கொடுங்கள்.
4. ........................................ ........................... படி கற்பியுங்கள்.
5. இதோ .......................................... இருக்கிறேன்.

கிறிஸ்து தாம் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்தாற்ற சீடர்களைத் தம்மோடு இணைத்துக் கொண்டார். அவர்களைப் பயிற்றுவித்து அவர் வழி வந்த திருச்சபையிடம் இன்று இப்பணிகளை ஒப்படைத்தார். திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் கிறிஸ்துவின் இப்பணிகளைச் செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவின் பணிகளை நிறைவேற்ற எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். இறை உதவியை நாட வேண்டும்.



**உயிர்த்த இயேசு தமது சீடர்களுக்குத் தோன்றினார்.**

## செயற்பாடு :-

1. மூவொரு இறைவன் தம்மை வெளிப்படுத்திய சம்பவத்தை வரைந்து காட்டுக.
2. 12 திருத்தூதர்களின் பெயர்களையும் திருவிவிலியத்திலிருந்து (லூக் 6:12-16) தேடி எழுதுக.
3. கிறிஸ்துவின் பணியை நீர் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் 5 முன்வைக்குக.
4. கிறிஸ்துவைப் போன்று நாம் பணிசெய்ய முற்படும் போது நமக்கு ஏற்படும் சவால்கள் நான்கைக் குறிப்பிடவும்.
5. அவ்வாறான சவால்களை நாம் எவ்வாறு மேற்கொள்ளலாம். அவற்றை எதிர்கொண்டு வெற்றியடைய என்ன செய்வீர்?

### வாழ்க்கைக்கு

பணி செய்ய முற்படும் போது
அதனால் ஏற்படும் துன்பங்களை ஏற்று வாழ்வேன்.
எனது துன்பங்களைக் கிறிஸ்துவோடு
இணைத்துக் கொள்வேன்.